මෙය රාජ්‍ය භාෂාවෙන් වෙනම මුද්‍රණය කර ඇත

III වැනි සැසි වාර්තාව—1970
பருவப் பத்திரம் இல. III—1970

දෙමළ මුද්‍රණය
(தமிழ் பதிப்பு)

# 1968 වසර සඳහා ලංකා තේ පර්යේෂණායතනයේ වාර්ෂික වාර්තාව

# 1968 ஆம் ஆண்டு இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலைய வருடாந்த அறிக்கை

(II වැනි කොටස)

பகுதி II

ආණ්ඩුවේ බලය පිට මුද්‍රණය කරන ලදී
அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1970 පෙබරවාරි
மார்ச்சு, 1970

ලංකාණ්ඩුවේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව මගින් ප්‍රසිද්ධ කරන ලදී
இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியால் பிரசுரிக்கப்பட்டது

කොළඹ මහ ලේකම් ගොඩනැගිල්ලේ පිහිටි තැ. පෙ. අංක 500 දරන රජයේ ප්‍රකාශන කාර්යාංශයෙන් මිලදී ලබාගත හැක

கொழும்பு செயலாளர் கருமாலயம், த. பெ. 500 அரசாங்க வெளியிட்டலுவலகத்தில் விற்பனைக்குண்டு

මිළ விலை : –/75

තැපල් ගාස්තුව தபாற் செலவு : –/10

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

---

# 1968-ம்
# ஆண்டுக்கான அறிக்கை
# பகுதி II


பதிப்பாசிரியர்கள்

எல். எச். பெர்ஞன்டோ, பீ.எஸ்ஸி, பீஎச்.டி. (லண்)

என். சண்முகநாதன், பீ.எஸ்ஸி, பீஎச்.டி. (லண்)



பிரசுரம்

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

சென்ற் கூம்ஸ், தலவாக்கொல்லை, இலங்கை

**1969**

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| சபை | 5 |
| பணியாளர் | 6 |
| அதிபர் அறிக்கை | 11 |

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

சபை

(1968, டிசெம்பர் 31ம் தேதியன்று)

---

தலைவர் வெற்றிடம்

பதவிவழி அங்கத்தவர்கள்

கமத்தொழில் அதிபர்:

திரு எம். எஸ். பெரேரா

கௌரவ நிதி அமைச்சரின் பிரதிநிதி:

திரு ஜி. டி. லோஸ்

தலைவர், இலங்கை தோட்டத் துரைமார்கள் சங்கம்:

திரு பி. வரசுவிதானே

தலைவர், இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்தாபனம்:

திரு எஸ். கே. டி. ஐயமன

தலைவர், இலங்கை கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கம்:

திரு தி. சி. ஏ. டி சொயிசா

தேயிலைக் கட்டுப்பாட்டதிகாரி:

திரு சி. பி. சண்முகம்

அதிபர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்:

கலாநிதி எல். எச். பெர்ணன்டோ

நியமன அங்கத்தவர்கள்

இலங்கைதோட்டத்துரைமார்கள் சங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள்:

திரு எஸ். பி. வைத்திலிங்கம்
திரு ஜி. பி. மிடில்டன்
திரு ஜே. ஆர். சொமவைல்

இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்தாபனத்தால் நியமிக்கப்பட்டவர்கள்:

திரு பி. ஜே. சி. டறன்ற்
திரு ஜே. எப். ஏ. பீரிஸ்
திரு எம். பி. ஹோஸ்பல்

இலங்கை கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள்:

திரு எஸ். பத்மநாதன்
திரு ஜே. எல். டி. பீரிஸ்
திரு ஜி. ஹெற்றியாராச்சி

கௌரவ கமத்தொழில் அமைச்சரால் நியமிக்கப்பட்ட சிறுதோட்டச் சொந்தக்காரரின் பிரதிநிதிகள்:

திரு டி. இ. ஹெற்றியாராச்சி
திரு எம். இராஜேந்திரம், எம்பிஇ

கௌரவ கமத்தொழில் அமைச்சரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் சபைப் பிரதிநிதி:

திரு டி. ஜே. றனவீரா, எம்.பி.

செயலாளர் திரு பி. கணபதிப்பிள்ளை

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

## பணியாளர்

(1968, டிசெம்பர் 31–ம் தேதியன்று)

### இயக்குநர் குழு

| | |
|---|---|
| அதிபர் | எல். எச். பெர்ணன்டோ, பீ.எஸ்சி., பீஎச்.டி. (லண்) |

### ஆராய்ச்சிப் பகுதிகள்

**கமத்தொழில் இரசாயனவியல்**

| | |
|---|---|
| கமத்தொழில் இரசாயனவறிஞன் | வி. பி. பவானந்தன், பீ.எஸ்சி.(இல), பீஎச்.டி. (எடின்), ஏ.ஆர்.ஐ.சி. |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | டபிள்யு. எம். டபிள்யு. பி. மணிப்புரு, பீ.எஸ்சி (இல), பீஎச்.டி (கன்ராப்) |
| ஆராய்ச்சி உதவியாளர் | *எஸ். சந்தனம், பீ.எஸ்சி. (இல)<br>*எஸ். சிவசுப்பிரமணியம், பீ.எஸ்சி. (இல) |
| நுண்தொழில் உதவியாளர் | வி. பெர்ணன்டோ<br>எஸ். ஜி. ஜெயசூரியா<br>தி. சி. சற். ஜேமன்<br>தி. குலரட்ண, பீ.எஸ்சி. (இல)<br>சி. சி. இராசசிங்கம்<br>ஏ. சோமரட்ண, பீ.எஸ்சி. (இல)<br>எஸ். சுந்தரலிங்கம், பீ.எஸ்சி. (பூண)<br>ஏ. பி. டி. விக்கிரமரட்ண, பீ.எஸ்சி (வித்தியோதய, இல) |

**உயிரினவிரசாயனம்**

| | |
|---|---|
| உயிரினவிரசாயனவறிஞன் | ஆர். எல். விக்கிரமசிங்கா, பீ.எஸ்சி. (இல), பீ.எஸ்சி. (லண்), பீஎச்.டி. (செவ்), எப்.ஆர்.ஐ.சி. |
| ஆராய்ச்சிஉத்தியோகத்தர் | ஆர். ஆர். செல்வேந்திரன், பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி (கன்ராப்) |
| ஆராய்ச்சி உதவியாளர் | *ஜி. ஆர். றேபட்ஸ், பீ.எஸ்சி (இல), ஏ.ஆர்.ஐ.சி. |
| நுண்தொழில் உதவியாளர் | யு. எல். எல். டி சில்வா, பீ.எஸ்சி. (இல)<br>டபிள்யு. ஏ. பி. டி சில்வா, பீ.எஸ்சி. (இல)<br>பி. பி. எம். பெரேரா<br>கே. பி. டபிள்யு. சி. பெரேரா, பீ.எஸ்சி. (இல)<br>கே. சிவபாலன், பீ.எஸ்சி. (இல), எம்.எஸ்சி. (ஐ.ஏ.ஆர்.ஐ, புது டெல்லி) |

---

*வெளிநாட்டில் பயிற்சிபெறுவோர்

சிற்றுயிரியல்

| | |
|---|---|
| சிற்றுயிரறிஞன் | டபிள்யு. தந்தநாராயண, பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்), டி.ஐ.சி. |
| ஆராய்ச்சி உதவியாளர் | டி. ஜே. டபிள்யு. றனவீரா |
| நுண்தொழில் உதவியாளர் | கே. டி. பந்துலரத்ண, பீ.எஸ்சி (இல)<br>எஸ். என். பெர்ணன்டோ, பீ.எஸ்சி. (இல)<br>ஏ. கதிரவேற்பிள்ளை, பீ.எஸ்சி. (இல)<br>சி. சண்முகம் |

நெமற்றேடியல்

| | |
|---|---|
| நெமற்றேடியலறிஞன் | பி. சிவபாலன், பீ.எஸ்சி (இல), பீஎச்.டி (றற்கர்ஸ்) |
| நுண்தொழில் உதவியாளர் | ஏ. ஆர். எம். ஹசிம்<br>பீ. ஏ. ஜோன்<br>தி. மணிவாசகர்<br>எஸ். சமரஜீவா<br>வி. சிவானந்தராஜா, பீ.எஸ்சி (இல) |

தாவரநோயியல்

| | |
|---|---|
| தாவரநோயிலறிஞன் | என். சண்முகநாதன், பீ.எஸ்சி. (இல,) பீஎச்.டி. (லண்) |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | ஆர். எல். டி சில்வா, பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்), டி.ஐ.சி. |
| நுண்தொழில் உதவியாளர் | *பி. வி. அருள்பிரகாசம், பீ.எஸ்சி. (மதராஸ்)<br>ஆர். என். போபியாராச்சி, பீ.எஸ்சி. (இல)<br>எஸ். ஆர். ஏ. பெர்ணன்டோ, பீ.எஸ்சி. (இல)<br>எஸ். முருகையா<br>தி. வி. சரவணபவன், பீ.எஸ்சி. (இல) |

தாவர உடற்றெழிலியல்

| | |
|---|---|
| தாவர உடற்றெழிலறிஞன் | *யு. பெத்தியாகொட, பீ.எஸ்சி. (இல) பீஎச்.டி. (லண்), டி.ஐ.சி. |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | வி. எஸ். குலசேகரம், பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்), எம்.ஐ.பயோல். |
| ஆராய்ச்சி உதவியாளர் | *எஸ். கந்தையா, பீ.எஸ்சி. (இல)<br>*எஸ். நாகராசா, பீ.எஸ்சி. (இல), எம்.எஸ். (கலிபோனியா)<br>*ஏ. ஆர். செபஸ்ரியாம்பிள்ளை, பீ.எஸ்சி. (இல) |
| நுண்தொழில் உதவியாளர் | ஏ. எஸ். பி. கோமஸ், பீ.எஸ்சி. (இல)<br>டி. ஜானகிறும், பீ.எஸ்சி. (மதராஸ்), எம். எஸ்சி. (இ. க. ஆ. நி., புது டெல்லி)<br>எஸ். கிருஷ்ணபிள்ளை, பீ.எஸ்சி. (இல)<br>எச். ஆர். சொலமன்<br>எச். பி. விஜயதுங்கா<br>எஸ். விமலதர்மா |

---

*வெளிநாட்டில் பயிற்சிபெறுவோர்

## புள்ளிவிவரவியல்

| | |
|---|---|
| புள்ளிவிவரவியலறிஞன் | பி. கணபதிப்பிள்ளை, பீ.எஸ்சி. (லண்), எப்.எஸ்.எஸ். |
| நுண்தொழில் உதவியாளர் | கே. சிவரத்தினம் |

## தொழின்முறையியல்

| | |
|---|---|
| தொழின்முறையியலறிஞன் | டி. கீர்த்திசிங்கா, பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்), டி.ஐ.சி. இ.இஞ். ஏ.எம்.ஐ. இ.இஞ். |
| அபிவிருத்தி இஞ்சினியர் | டபிள்யு. ஜோசப், பீ.எஸ்சி. இஞ். (இல) |
| ஆராய்ச்சி உதவியாளர் | *என். எம். அப்துல் கபார், பீ.எஸ்சி. (இல) |
| | *டபிள்யு. சி. ஏ. டி. சில்வா, பீ.எஸ்சி. (இல) |
| நுண்தொழில் உதவியாளர் | டபிள்யு. ஏ. சி. டி. சில்வா |
| | எஸ். ஐயரத்தினம், பீ.எஸ்சி. (இல) |
| | எஸ். சமரசிங்கம் |
| | ஏ. தேவதாசன், பீ.எஸ்சி. (இல). |
| மின்சார முகாரி | டபிள்யு. ஆர். சொலமன் |
| மின்சாரத் தொழிலாளர் | கே. ஏ. போவி |
| இயந்திரத் தொழிலாளர் | டி. ஏ. எஸ். ஒபாதா |
| | கே. எஸ். வடிவேலு |

## சென்ற் கூம்ஸ்

| | |
|---|---|
| கமத்தொழிலறிஞன் | எல். ஏ. சிவரத்தினம், பீ.எஸ்சி. (டன்ல்ம்) |
| தலைமை தொழிற்சாலை உத்தியோகத்தர் | வீ. ஏ. பெர்னுன்டஸ் |
| பதில் தலைமை எழுதுவினைஞர் | எச். என். டி. சில்வா |
| வெளிக்கரும உத்தியோகத்தர் | டபிள்யு. ஆரியபாலா |
| அபோதிக்கரி | எஸ். பி. டி சில்வா |
| வேலைத்தல எழுதுவினைஞர் | ஆர். ஏ. டானியல் |
| எழுதுவினைஞர் (வேலைத்தலம்) | கே. எச். ரி. தசனுயக்கா |

## வெளியூர் சேவைகள்

### கீழ்ப்பிரதேச சேவை

### கீழ்ப்பிரதேச நிலையம், இரத்தினபுரி

| | |
|---|---|
| உயிரினவிரசாயனவறிஞன் | ஆர். எல். விக்கிரமசிங்கா, பீ.எஸ்சி. (இல), பீ.எஸ்சி. (லண்), பீஎச்.டி. (செவ்), எப்.ஆர்.ஐ.சி. |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | டி.தி.வெத்தசிங்கா, பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி (ரீடிங்) |
| ஆலோசனை உத்தியோகத்தர் | ஜே. வி. சபாநாயகம், பீ.எஸ்.ஏ., (தொறன்தோ), எம்.எஸ்சி. (கல்ப்), |
| அபிவிருத்தி இஞ்சினியர் | டபிள்யு. யோசப், பீ.எஸ்சி. இஞ். (இல) |
| நுண்தொழில் உதவியாளர் | இ. ஜெ. பி. டி. சில்வா, பீ.எஸ்சி. (இல) |
| | யு. எல். எல். டி சில்வா, பீ.எஸ்சி (லண்) |
| | டபிள்யு. ஏ. பி. டி சில்வா, பீ.எஸ்சி (இல) |
| | சி. கந்தப்பா, பீ.எஸ்சி. (இல) |
| | ஏ. ஏ. சி. கருணரற்ன, பீ.எஸ்சி. (இல) |
| | டி. டி. குரூன் |

---

*வெளிநாட்டில் பயிற்சிபெறுவோர்

| | |
|---|---|
| | கே. பி. டபிள்யு. சி. பெரேரா, பீ.எஸ்சி. (இல) |
| | என். எஸ். இராஜேந்திரம், பீ.எஸ்சி. (மதராஸ்) |
| | *தி. எப். சால்டின், பீ.எஸ்சி. (இல). |
| | எச். எச். சமரக்கோன் |
| | யு. பி. டி. எஸ். வைத்தியநாத, பீ.எஸ்சி (இல) எம்.எஸ்சி. (இல), |
| | என். யோகரத்தினம், பீ.எஸ்சி. (அலகபாட்) |
| பரிபாலன உத்தியோகத்தர் | சி. கீர்த்திரத்ன, எப்.சி.சி. எஸ். |
| கணக்கு எழுதுவினைஞர் | சி. ஆர். பி. சலி |
| சுருக்குத் தட்டெழுத்தாளர் | எஸ். கே. பி. தம்பிமுத்து |
| மின்சாரத் தொழிலாளர் | பி. தி. றனசிங்கா |
| எழுதுவினைஞர் (வேலைத்தலம்) | தி. டி. வி. கூறே |

## சென்ற் ஜோக்கிம்

| | |
|---|---|
| தோட்டத்துரை | ஜி. எஸ். முத்தெத்துவெகம |
| தலைமை தொழிற்சாலை உத்தியோகத்தர் | எம். எஸ். டபிள்யு. விஜயரத்ன |
| தலைமை எழுதுவினைஞர் | ஜி. எல். ஏ. தோமஸ் |
| வெளிக்கரும் உத்தியோகத்தர் | டி. டி. பத்திநாயக்க |

## கொட்டாவ உபநிலையம், தலகம்பொல

| | |
|---|---|
| பொறுப்பு உத்தியோகத்தர் | கே. எச். ஜி. குணபாலா |
| நுண்தொழில் உதவியாளர் | எச். டி. ஜெயசிங்க |

## டெனியாய

| | |
|---|---|
| நுண்தொழில் உதவியாளர் | ஜே. ஐ. எச். பண்டாரநாயக்கா |

## மத்தியபிரதேச சேவை

| | |
|---|---|
| மத்தியபிரதேச விஞ்ஞான உத்தியோகத்தர் | டி. கல்நைடோ, பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்) |
| ஆலோசனை உத்தியோகத்தர் | எம். கே. வைத்திலிங்கம் |
| நுண்தொழில் உதவியாளர் | தி. ஏ. முனசிங்க |
| | எச். பி. இரத்னயக்கா |
| | கே. திருஞானசுந்தரம், பீ.எஸ்சி. (இல) |

## ஊவா சேவை

| | |
|---|---|
| ஊவா விஞ்ஞான உத்தியோகத்தர் | எல். எம். டி. டபிள்யு. திலகரத்ன, பீ.எஸ்சி. (இல), எம்.எடி. (கலிபோனியா) |
| நுண்தொழில் உதவியாளர் | என். எம். அபயசிங்கா |
| | என். எல். சி. பெர்னண்டோ, பீ.எஸ்சி. (இல) |
| | எம். ரி. சுப்பிரமணியம், பீ.எஸ்சி. (இல) |
| எழுதுவினைஞர் | ஏ. சி. பெரேரா |

## ஆலோசனைச் சேவை

| | |
|---|---|
| பதில் பிரதான ஆலோசனை உத்தியோகத்தர் | எல். எம். டி. டபிள்யு. திலகரத்ன, பீ.எஸ்சி. (இல), எம்.எடி. (கலிபோனியா) |

---

*வெளிநாட்டில் பயிற்சிபெறுவோர்

| | |
|---|---|
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | ஆர். கே. நத்தானியல், பீ.எஸ்சி. (பூனு) |
| | ஜே. வி. சபாநாயகம், பீ.எஸ்.ஏ. (தொறன்தோ), எம்.எஸ்சி (கல்ப்) |
| | எம். கே. வைத்திலிங்கம் |
| நிழற்படம் பிடிப்போர் | டி. ஜே. எம். ஹெற்றியாராச்சி |

## நூல்நிலையமும் வெளியீடுகளும்

| | |
|---|---|
| வெளியீட்டுப் பதிப்பாசிரியர் | எல். எச். பெர்னுன்டோ, பீ.எஸ்சி., பீஎச்.டி (லண்) |
| | ஆர். எல். டி சில்வா, பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்), டி.ஐ.சி. |
| நூல்நிலையப் பெறுப்பாளர் | டி. ஜே. எஸ். டி சில்வா, பீ.எஸ்சி. (பஞ்ஜப்) |

## பரிபாலனம்

| | |
|---|---|
| பதில் பிரதான பரிபாலன உத்தியோகத்தர் | பி. கணபதிப்பிள்ளை, பீ.எஸ்சி. (லண்), எப்.எஸ்.எஸ். |
| கணக்காளர் | எச். எஸ். குணவர்த்தனு, பீ.ஏ. (இல) |
| கணக்கு உதவியாளர் | ஆர். ஐ. பெரைரா |
| பிரதான எழுதுவினைஞர் (கணக்கு) | டபிள்யு. ஜே. சாமுவல் |
| சிரேட்ட கணக்கு எழுதுவினைஞர் | எம். பி. பாலிஸ் |
| கணக்கு எழுதுவினைஞர் | கே. டி. பி. எச். அபயகுணவர்த்தனு |
| | எச். அத்தநாயக்க |
| | ஜி. ஏ. கே. பி. டி சில்வா |
| | கே. பி. குணவர்த்தனு |
| | என். எம். ஜெயத்திலகா |
| | எஸ். குலசபாநாதன் |
| | யு. சி. உனம்புவ |
| | சி. பி. வருவிற்ற |
| | எச். சி. விக்கிரமசிங்கா |
| உள்ளகக் கணக்குப் பரிசோதனை உத்தியோகத்தர் | ஐ. றெங்கராஜ் |
| உள்ளகக் கணக்குப் பரிசோதனை எழுதுவினைஞர் | என். சச்சிதானந்தன் |
| மொழி பெயர்ப்பாளர்/ போதனுசிரியர் | சி. எம். பெர்னுன்டோ, பீ.ஏ. (இல) |
| அதிபரின் செயலாளர் | ஜி. ஏ. எஸ். குணசிங்கா |
| சுருக்குத் தட்டெழுத்தாளர் | இ. சி. சி. புரோகியர் |
| | எஸ். ஏ. எல். எச். பெர்னுன்டோ |
| | தி. ஜே. ஹலால்டீன் |
| | பி. டபிள்யு. உடுவாவல |
| | எஸ். டி. ஜே. ஜே. விதானபத்திரன |
| தட்டச்சு எழுதுவினைஞர் | ஜே. என். அப்பசிங்க |
| | டி. டபிள்யு. பதலோமியஸ் |
| | சி. வி. ஆர். டி. பொன்சேகா |
| | வி. கோதாகொட |
| | எஸ். பி. வெத்தாவ |
| பதிவு எழுதுவினைஞர் | கே. எல். டி. அல்விஸ் |
| தபாற் எழுதுவினைஞர் | எச். டபிள்யு. பெரேரா |
| பண்டசாலைப் பொறுப்பாளர் | ஐ. பி. திசாநாயக்க |

# அதிபர் அறிக்கை

எல். எச். பெர்ணுன்டோ, பீ.எஸ்சி., பீஎச்.டி.

## பணியாளர்

கலாநிதி இ. எம். செனறி அவர்கள் இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிலைய அதிபர் பதவியிலிருந்து 1968, ஜூலை மாதம் ராஜிஞமாச் செய்ததைத் தொடர்ந்து கலாநிதி எல். எச். பெர்ணுன்டொ அவர்கள் அதிபராக கடமையாற்றுகிருர். கமத்தொழில் இரசாயனவியல், பயிராக்கவியல் ஆகிய பிரிவுகளின் ஆலோசகராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றிய திரு. ஜே. ஏ. எச். ரொலஸ்ற் அவர்கள் 1968, ஜூன் மாதம் தமது பதவியை ராஜிஞமாச் செய்தார். சிரேட்ட பதவியினரில் நடைபெற்ற மற்றய மாற்றங்கள் வருமாறு. பிரதான பரிபாலன உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. ஏ. சி. பெரேரா அவர்கள் தமது பதவியிலிருந்து இளைப்பாறிஞர். கலாநிதி ஏ. எஸ். எல். திருமான (உயிரினவிரசாயனவறிஞன்), திரு. சி. எச். விக்கிரமசிங்க (தேயிலை சுவையாய்வோன்) ஆகியோர் தமது பதவியை ராஜிஞமாச் செய்தனர். கலாநிதி வி. எஸ். குலசேகரம், கலாநிதி டபிளியு. எம். டபிளியு. பி. மணிப்புரு ஆகியோர் சிரேட்ட விஞ்ஞானப் பதவியினர் தரத்துக்கு உயர்ச்சி பெற்றனர். கலாநிதி ஆர். எல். விக்கிரமசிங்க, உயிரினவிரசாயனவறிஞன், இரத்தினபுரியிலிருக்கும் கீழ்ப்பிரதேச நிலையத்துக்கு மாற்றப்பட்டார். கலாநிதி யு. பெத்தியாகொட ஐக்கிய ராஜ்யத்துக்கும், கலாநிதி என். சண்முகநாதன் கனடாவுக்கும் படிப்பு விடுதலையில் சென்றனர். கலாநிதி என். சண்முகநாதன், கலாநிதி ஆர். எல். டி சில்வா ஆகியோர் தாவர நோயியல் சம்பந்தமான முதற் சர்வதேச மாநாட்டுக்கும், கலாநிதி டபிள்யு. தந்தநாராயண அவர்கள் மொஸ்கோவில் நடைபெற்ற சிற்றுயிரியல் சம்பந்தமான 13வது சர்வதேச மாநாட்டுக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்காக அழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் இம் மாநாடுகளில் கலந்துகொள்ள முடியவில்லை. ஆஞல் இவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அங்கு சமர்ப்பிக்கப்பட்டன.

ஆராய்ச்சி வேலைகளுக்காக உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. தொழின்முன்றயியல், சிற்றுயிரியல், நெமற்ருேடியல் ஆகிய பிரிவுகளில் காலியாகவுள்ள பதவிகள் இன்னும் நிரப்பப்படவில்லை. இதஞல் ஆராய்ச்சி வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

## நிலையங்கள்

243 ஏக்கர்களிலிருந்து 397,894 இரு. செய் தேயிலையை சென்ற் கூம்ஸ் பெற்றது. ஏக்கருக்கு 1813 இருத்தலாகப் பெறப்பட்ட இவ் விளைச்சல் சென்ற் கூம்ஸ் தோட்ட சரித்திரத்தில் என்றுமே அடையப் பெற்றிராத மிகக் கூடியதொன்ருகும். தேயிலை ஆராய்ச்சி நிலையம் சென்ற் கூம்ஸ் தோட்டத்தை கொள்வனவு செய்த ஆண்டில், அதாவது 1928இல் ஏக்கருக்கு 480 இருத்தலாக இருந்த விளைச்சலுடன் இதை ஒப்பிட்டுப் பார்க்குபோது உண்மையில் இதுவோர் பெரும் சாதனையாகும். 1968இல் இத் தோட்டத் தேயிலையின் தேறிய சராசரி விலை ரூபா 2.29 ஆகும். மேற்பிரதேச தேயிலைகளின் சராசரி விலை (ரூபா 1.93)யைவிட இது கூடியதாகும். சென்ற் கூம்ஸ் தோட்டத்தின் மொத்த லாபம் ரூபா 282,115 ஆகும்.

சென்ற் ஜோக்கிம் தோட்டம் 260 ஏக்கர்களிலிருந்து 276,665 இரு. செய் தேயிலையை உற்பத்தி செய்து, ஏக்கருக்கு 1102 இரு. சராசரி விளைச்சலைப் பெற்றது. சென்ற் ஜோக்கிம் தோட்டத்தின் ஏக்கர்க் கணக்கில் மூன்றில் ஒரு பகுதி தேயிலை திரும்ப நடுகைக்காக

பிடுங்கியகற்றப்பட்டதன் விளைவாக கடந்த மூன்று ஆண்டுகளாக இத் தோட்டத்தில் பெறப்பட்ட நஷ்டம் இப்போது, 1968இல் ரூபா 26,152 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. சென்ற் ஜோக்கிம் தேயிலையின் சராசரி விற்பனவு விலை ரூபா 1.73ஆகும். கீழ்ப்பிரதேசத் தேயிலையின் சராசரி விலை (ரூபா 1.63)யைவிட இது கூடியதாகும்.

காலி மாவட்டத்திலுள்ள கொட்டாவ தல்கம்பொல இடத்திலிருக்கும் தே. ஆ. நி. உபநிலையம் இப்போது 75 ஏக்கர் பரப்புடையது. இதில் 35 ஏக்கர்களில் முளைவதைத் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. பச்சை இலைகள் விற்பனை செய்வதிலிருந்து கிடைத்த வரும்படி, பரிசோதனைச் செலவுகள் உட்பட இந் நிலையத்தில் சகல வேலைச் செலவுகளுக்கும் போதுமானதாகவிருந்தது. இந் நிலையத்தின் அபிவிருத்தியும் முகாமையும் அதி சிறப்பாகக் கவனிக்கப்பெற்றன.

கீழ்ப்பிரதேச ஊவா பிரதேசத்தில் ஆராய்ச்சி நிலையமொன்று நிறுவுவதற்காக பசறை யூரித் தொகுதி அக்கிறந்தனைப் பிரிவிலிருந்து 203 ஏக்கர் தேயிலை நிலம், பத்தனைநிலம், புதர்நிலல் கொள்வனவு செய்வதாக உறுதியான தீர்மானமொன்று செய்யப்பட்டது. இந் நிலைய அபிவிருத்தியில் அதிக முன்னேற்றம் செய்யப்பட்டதுடன், முதன்முதலான பரிசோதனைகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஹந்தானை முதலீடு கம்பனி தே.ஆ.நி. மத்திய பிரதேச நிலையத்துக்காக 56 ஏக்கர் நிலத்தை 1968 ஆகஸ்ட்டு மாதம் தேயிலை ஆராய்ச்சி நிலையத்துக்கு மாற்றியது. இந் நிலையத்தை அபிவிருத்தி செய்வதிலும் பரிசோதனைத் திட்டங்களை செயற்படுத்துவதிலும் போதுமானளவு முன்னேற்றம் செய்யப்பட்டது.

# ஆராய்ச்சி

யூரியாவை அமோனியம் சல்பேற்றுடன் ஒப்பிட்டுப்பார்த்தபோது ஈரமான மண்ணின் மேற்பரப்பில் அவை வழமையான முறைப்படி இட்டப்பட்டபோதும் விளைச்சலில் குறிப்பிடத்தக்க வித்தியாசம் எதுவும் இருப்பதாகக் காணப்படவில்லை. யூரியாவிலிருந்து நைதரசன் இழக்கப்படுவது பற்றியும் இத்தகைய இழப்புகளைக் குறைப்பதற்கு கையாளப்படவேண்டிய பாதுகாப்புகள் பற்றியும் ஆராயப்பட்டு அதே பிரகாரம் வேண்டிய சிபாரிசுக்கள் செய்யப்பட்டுள்ளன. தே.ஆ.நி. நிலையங்களிலும் வர்த்தகத் தோட்டங்களிலும் நடாத்தப்பட்ட பல்வேறு செயற்கையுரப் பரிசோதனைகளில் நைதரசன் விளைச்சலைக் கூட்டியதாகக், காணப்பட்டது; ஆனால் பொசுபேற்று, பொற்ருசு ஆகியவற்றுக்கு கூடுதலான விளைச்சல் இருக்கவில்லை. இந்த முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு நாற்றுத் தேயிலைக்கு ஏக்கருக்கு ஒரு வருடம் 80 தொடக்கம் 200 இரு. நைதரசனும், 20 இரு. $P_2O_5$ உம், 40–80 இரு. $K_2O_5$ உம் முளைவகைத் தேயிலைக்கு 240 தொடக்கம் 360 இரு. நைதரசனும், 30 இரு. $P_2O_5$ உம், 90 தொடக்கம் 360 இரு. $K_2O_5$ உம் இடப்படவேண்டுமென சிபாரிசு செய்யப்பட்டது. இளம் தேயிலையில், நைதரசன், பொசுபேற்று, பொற்ருசு ஆகியவற்றுக்கு சிறந்த விளைச்சல் கிடைத்தன. முதலாவது வருடத்தில் தேயிலைத் தாவரமொன்றுக்கு $\frac{1}{2}$ அவு. அளவிலும் இரண்டாவது வருடம் $\frac{3}{4}$ அவு. அளவிலும் T200 இடப்படல்வேண்டுமென செய்யப்பட்ட சிபாரிசு தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகின்றது. இவை வருடமொன்றுக்கு ஆறு முறைகள் இடப்படுகின்றன. தேயிலைக் கொழுந்து எடுக்க ஆரம்பிக்கப்படும் காலத்தில் T700 போன்ற செயற்கையுரம் உபயோகிக்கப்படலாம். கப்பாத்து முதன் முறையாகச் செய்யப்படும் வரை வருடமொன்றுக்கு ஏக்கருக்கு சுமார் 200 இரு. நைதரசன் அளவில் இது கொடுக்கப்படலாம்.

வருடமொன்றுக்கு ஏக்கருக்கு 20 இரு. வரை இடப்பட்ட சிங்குச் சல்பேற்றினால் விளைச்சல்கள் கூடியிருப்பதாகக் காணப்பட்டது. சுண்ணாம்பு சேர்ப்பதனால் விளைச்சல் எதுவிதத்திலும் கூடுவதாகத் தெரிய

வில்லே, ஆனல் இது மண்ணின் pH ஐக் கூட்டியுள்ளது. எனவே, அதிகளவில் இடப்படும் அமோனியம் சல்பேற்றினல் மண்ணின் அமிலத் தன்மை கூடும் இடங்களில் இவ்வாறு சுண்ணும்பு சேர்ப்பது நலந் தருவதாகவமையும்.

உக்கின இலேகள் இடுதல், முக்கியமாக இளம் தேயிலேயில் அதிக பலனளித்ததாகக் காணப்பட்டது. கௌதமாலா, டடாப், நெல் உமி ஆகியன இதற்கு உபயோகிக்கப்பட்ட பொருட்களாகும், இவை வருடமொன்றுக்கு ஏக்கருக்கு 20 தொன் வரை உபயோகிக்கப்பட்டன. நிழல் மரங்கள் அகற்றப்பட்டதன் விளேவாக நாற்றுத் தேயிலேயிலும் முளேவகைத் தேயிலேயிலும் விளேச்சல் கூடியுள்ளதாகக் காணப்பட்டது. எனினும், நிழல் அகற்றப்பட்டதால் எற்படும் விளேவுகளே நிர்ணயிப்பதற்கு பரிசோதனேகள் இன்னும் தொடர்ந்து நடாத்தப்பட்டு வருகின்றன.

வளர்ச்சியின் உடற்ருெழிலியுல்பு பற்றிய ஆராய்ச்சிகளும், வளர்ச்சியையும் விளேச்சலேயும் பாதிக்கும் பல்வேறு வளர்ச்சிப் பகுப்புகள் பற்றிய ஆராய்ச்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. கண்ணுடி வீட்டில், மணல் வளர்ப்புத் தொழிநுட்ப முறைகளேக் கையாண்டு தேயிலேயில் குறைவுநோய் அறிகுறிகளே ஏற்படுத்தவும் அவற்றைப் பின்னர் இல்லாமற் செய்யவும் முடிந்தது. வளர்ச்சி, உறங்குநிலே பற்றிய ஆராய்ச்சிகள் தொடரப்பட்டன. உறங்குநிலேயைத் தாண்டுவதற்கும் தேயிலே அங்குரங்களின் வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், அத்துடன் காப்பாத்து வெட்டலேத் தொடர்ந்து அங்குரங்கள் அதிகளவில் தோன்றி வளர்ச்சியுறவும் தாவர ஓமோன்கள் உபயோகிக்கப்பட்டன.

தேயிலேத் தோட்டங்களில் உள்ள களேகளேக் கட்டுப்படுத்த ½ பைந்து கிரமோக்சோன் 50 தொடக்கம் 60 கலன் தண்ணீரில் கலக்கப்பட்டு இரு மாதங்களுக்கொரு முறையாக பல தோட்டங்களில் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. சில களேகளே இந்த முறையால் திருப்திகரமாகக் கட்டுப்படுத்த முடியாமலிருப்பதால் கிரமோக்சோன் கூடுதலான அளவுகளிலும் அடிக்கடியும் உபயோகிக்கப்படவேண்டுமெனக் காணப்பட்டது. இந்த முறையினல் செலவு கூடுவதுதான் காரணமாக கிரமோக்சோனுக்குப் பதிலாக உபயோகிக்க அல்லது அதனுடன், சேர்த்து உபயோகிக்க உகந்த மற்றைய பல இரசாயனப் பொருட்கள் களேகொல்லிகளாக முயற்சிக்கப்பட்டன. இவற்றுள் டியூரோன் ஏக்கர் ஒன்றுக்கு ½ இரு. அளவில் உபயோகிக்கப்படும்போது களேகளே இரண்டு மாத காலங்களுக்கு ஓரளவு திருப்திகரமாகக் கட்டுப்படுத்துவதாகக் காணப்பட்டது. இதன் காரணமாக கிரமோக்சோனேயும் டியூரோனேயும் ஒன்றுவிட்டொன்ருக உபயோகித்துப் பார்க்குமாறு தோட்டங்களுக்கு ஆலோசனே செய்யப்பட்டன.

முளேவகைத் தேயிலேகள் எல்லா தே.ஆ. நிலேயங்களிலும் தொடர்ந்து பரீட்சிக்கப்பட்டு வருகின்றன. முளேவகைகளில் விளேச்சல், தேயிலேத்தரம் பற்றியும் நோய், வறட்சி ஆகியவற்றைத் தாங்குமியல்புகள் பற்றியும் செய்யப்பட்ட மதிப்பீடுகள் 'தேயிலேக் காலாண்டுச் செய்தி' யில் பிரிசுரிக்கப்பட்டுள்ளன. நாற்றுத் தேயிலேப் பகுதிகளிலிருந்து திறமையான தேயிலேச் செடிகள் தேர்வு செய்யப்படும் வழமையான முறையுடன், காற்று மகரந்தச் சேர்க்கை கையால் மகரந்தச் சேர்க்கை செய்து பெறும் மரபுவழி எச்சங்களிலிருந்து தேர்வு செய்வதன் மூலமும் புது முளேவகைகள் பெறப்பட்டுள்ளன. வீசுகதிர் வீழ்ச்சி பெற்ற வெட்டுத்தண்டுகள், விதை ஆகியன உபயோகித்தும் உகந்த சிறப்பியல்புகள் பெறுவதற்கான முயற்சிகளும் கையாளப்பட்டன.

தேயிலே திரும்பநடுவதற்கு உகந்த நிலத்தைத் தெரிவுசெய்வதில் அதிக கவனம் இப்போது செலுத்தப்படுகின்றது. ஆழமற்ற அரித்த மண்களும், மண்களின் மேற்பரப்பையண்டி வைக்கப்பட்டிருக்கும் கற்பாறைகளேக் கொண்ட மண்களும் எப்போதும் தவிர்க்கப்படல் வேண்டு

மென ஆலோசனை செய்யப்பட்டது. உகந்த மண்களில் மண்ணை கௌதமாலாப் புல்லுகொண்டு சீர்ப்படுத்துதல் எப்போதும் அவசிய மானதல்ல. மண்சீர்ப்பாடு செய்யாத இடங்களில் மண், நீர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல்வேண்டும். தேயிலை வரிசைகளுக்கிடையில் உகந்த அவரையங்களை வளர்ப்பது இதற்கு உகந்ததாகும். இரண்டு அடி ஆழமுள்ள நடுகைக் குழிகளில் சேதனவுறுப்புப் பொருளும் மேற்பரப்பு மண்ணும் சேர்க்கப்படவேண்டுமென வலியுறுத்திக் கூறப்பட்டது.

உயர்ந்த மலைப்பிரதேசங்களில் மட்டுமே இழைப்புழுச்சேதம் இருப்பதாகக் கூறப்படுவதற்கில்லை. மத்திய, கீழ்ப்பிரதேசங்களிலும் சரியற்ற முளைவகைத் தேயிலைத் தாவரங்கள் பிரற்றிலெங்குஸ் லூசி இழைப்புழுக்களினால் பாதிக்கப்பட்டிருந்ததாக அண்மையில் காணப்பட்டது. அதிக நைதரசனும், குறைந்தளவு பொற்றாசும் உள்ள இடங்களில் இழைப்புழு அதிகளவில் தோன்றலாமெனத் தெரிகின்றது. மண் ஈரலிப்பு வேறுபாடுகள் இழைப்புழுக்களை மதிப்பீடு செய்வதற்காகத் தெரிவுசெய்யும் மண் மாதிரிகளைப் பாதிப்பதாகத் தெரிவதால் ஒவ்வொரு வட்டாரத்திலும் மண் மாதிரிகள் எடுப்பதற்கான சரியான நேரத்தை நிர்ணயிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

'வின்ச்' இயந்திரம் உபயோகிப்பதற்கு எதிராக தேயிலையை கையால் பிடுங்கும் முறையை ஒப்பிட்டுப் பார்த்த பரிசோதனைகளில் 'வின்ச்' இயந்திரம் உபயோகிக்கப்பட்ட இடங்களில் இழைப்புழுப் பெருக்கம் ஆரம்பத்தில் குறைவாக இருந்தபோதும், ஈற்றில் இழைப்புழு பெருகி நோய் ஏற்படுவதிலோ அல்லது தேயிலையில் பின்னேற்படும் வளர்ச்சியிலோ இவ்விரு முறைகளுக்குமிடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசமெதுவும் இருந்ததாகக் காணப்படவில்லை. எனவே, 'வின்ச்' இயந்திரம் உபயோகிப்பதைத் தொடர்ந்து ஆழக்கிண்டி தேயிலை வேர்கள் அதிகளவில் அப்புறப்படுத்தப்பட வேண்டுமென்பதை இம்முடிவுகள் குறிக்கின்றன.

இழைப்புழு நோயைத் தாங்கக்கூடிய முளைவகைத் தேயிலைகளைத் தெரிவு செய்வதில் இன்னும் பரிசோதனைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. விளைச்சலுக்காகவும் இழைப்புழு நோயைத் தாங்குமியல்புக்காகவும் பரீட்சிக்கப்பட்ட ஆறு முளைவகைத் தேயிலைகளில் (தே.ஆ.நி. 2025, 2142, டிரி1, முல்லோயா 116, 208, 241) தேஆநி 2025 மிகச் சிறந்ததெனவும் இதையடுத்து முல்லோயா 241 சிறந்ததெனவும் காணப்பட்டது.

போறியா ஹிப்போலற்றெறிற்யாவிலும் தேயிலையிலுள்ள ஏனைய வேர் நோய்களிலும் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை ஆராய்ச்சிகளின்படி இளம் தேயிலைத் தாவரங்களைத் தாக்குவதற்கு சிறிதளவு நோய்க்கிருமி போதுமானது எனக்காணப்பட்டது. தேவைப்படும் நோய்க்கிருமியளவு தேயிலைச் செடியின் வயதுக்கேற்ப வேறுபடுகின்றதா என்பதை நிர்ணயிக்க முயற்சியொன்று இப்போது மேற்கொள்ளப்படுகின்றது. போ. ஹிப்போலற்றெறிற்றியா பங்கசு தரிசு மண்ணில் உள்ள தேயிலை வேர்த்துண்டுகளில் சுமார் நான்கு வருடங்கள் வரை அழுகற்றுாரமாக வாழமுடியுமெனக் காணப்பட்டது. மெதயில் புரோமைட்டு 100 சதுர அடி தொற்றிய மண்ணுக்கு ஒன்று தொடக்கம் இரண்டு இருத்தல் வீதம் உபயோகிக்கப்படும்போது அது பெரிய தேயிலை வேர்க் கட்டைகளில் இருந்த போ. ஹிப்போலற்றெறிற்யா பங்கசுவை அதிகளவில் கட்டுப்படுத்தியது. போறியா தொற்றியுள்ள கட்டைகளை கிண்டி வெளியே எடாது அவை உள்ள அந்த இடங்களை வெற்றிகரமாகத் தூபமூட்ட முடியுமென்பதை இக் கண்டுபிடிப்பு தெரிவிக்கின்றது. மெதயில் புரோமைட்டு உபயோகித்து மண் தூபமூட்டப்படும்போது இதனால் மண்நுண்டாவரவினம், தேயிலை, கௌதமாலாப் புல்லு ஆகியவற்றின் வளர்ச்சி எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. தேயிலையில்

காணப்படும் மரக்கரிக்கட்டை அழுகனோய் (உஸ்ருலினு டெயுஸ்ரு), றொசெல்லினியா ஆற்குவாற்ரு ஆகியன மெதயில் புரோமைட்டினுல் திருப்திகரமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றதெனவும் காணப்பட்டது.

காறைப்புற்றுநோய் கிளைப்புற்று நோய் (போமோப்சிஸ் தியே) ஆகியவற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில், பரீட்சிக்கப்பட்ட எந்தவொரு பங்கசுகொல்லியாவது இந்நோய்களைத் திருப்திகரமாகக் கட்டுப்படுத்தவில்லையெனக் காணப்பட்டது. சன்ரார் A (Santar A) கூட முன்னர் ஏதிர்பார்த்த அளவுக்கு செயலாற்றவில்லை. போ. தியே பங்கசுவால் தாக்கப்படும் இடங்களில் திரும்ப நடுகை செய்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட முளைவகைகள் பற்றிய அறிக்கை யொன்று 1968 டிசெம்பர் மாத தேயிலைக்காலாண்டுச் செய்தியில் பிரசுரிக்கப்பட்டது.

கொப்புள வெளிறல் தொற்றுநோயியல் பற்றியும் இதனுல் விளைச்சலில் ஏற்படும் குறைவுபாடு பற்றியும் ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

வெடிதுளை துளைப்பி வண்டைக் கட்டுப்படுத்த டியெல்றினுக்குப் பதிலாக ஹெப்ருகுளோர் மட்டுமே தற்போது சிபாரிசு செய்யப்படுகின்றது. ஹெப்ருகுளோர் சுமார் 15 மாத காலத்துக்கு செயலாற்றக் கூடியது. இக் காரணத்துக்காகவும், கப்பாத்து செய்த சுமார் 18 மாத காலங்களுக்குப் பின்னரே வெடிதுளை துளைப்பி வண்டின் பெருக்கம் அதி உச்சநிலையை அடைவதாலும், ஹெப்ருகுளோர் நடு வளர்ச்சி சக்கரத்தின்போது உபயோகிக்கப்படும்போது இவ்வண்டைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்துகின்றது.

சிவப்புச் சிலந்திச் சிற்றுண்ணி, சென்னிறச் சிற்றுண்ணி ஆகியவற்றைக் கட்டுப்படுத்த மொறெஸ்ருன், கெல்தேன் ஆகியன சிறந்த அக்கரிட்டுக் கொல்லிகளாக விளங்குகின்றன.

தேயிலைத் தோற்றிக்ச் புழுவில் நோயுண்டாக்கும் ஒரு பற்றீரியமும் பங்கசுவும் மண்டலக் குடித்தொகையிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இவ்வங்கிகள் இப்போது இன்னதெனக் காணப்பட்டுள்ளன. இவற்றின் பெருக்கம் தென்மேற்குப் பருவக்காற்றுக் காலத்திலேயே உச்ச நிலையை அடைகின்றன. இதனுலேயே இப் பருவக்காற்றுக் காலத்தில் தோற்றிக்ச் புழுக்கள் குறைவாகக் காணப்படுகின்றன. தேயிலையில் உபயோகிப்பதற்கு டிடிரி மட்டுமே சிறந்த தோற்றிக்ச் கொல்லியாக தற்போது கிடைக்கப்பெறுகின்றது. ஒருமுறை விசிறப்படும் டிடிரி $2\frac{1}{2}$ மாத காலத்துக்கு செயலாற்றக்கூடியது. மேலும், டிடிரி விசிறப்படுவதால் தோற்றிக்ச் புழுக்களில் வாழும் ஒட்டுண்ணிகளின் ஆக்கம் எதுவிதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. தேயிலைச் செடிக்கு பூச்சிநாசினி விசிறுவதன்மூலம் அல்லது மண், அங்குரம், வேர் ஆகியவற்றை இதனுல் நனைத்தல் மூலம் அல்லது தொகுதிப்பூச்சிகொல்லிகளை இலைகளில் விசிறுவதன் மூலம் உயிர்வாழ் மரக் கறையான்களை கட்டுப்படுத்த முடியவில்லை. தேயிலை பயிரிடப்பட்ட நாளிலிருந்து வெடிதுளை துளைப்பி வண்டைக் கட்டுப்படுத்த வருடாவருடம் விசிறப்படும் ஹெப்ருகுளோர் மூலமெ இக் கறையான்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

வெவ்வோறு வகையான தேயிலைகளில் பண்பறிதற்முறையாகவும் அளவறிதற் முறையாகவும் செய்யப்பட்ட இரசாயனப் பகுப்புகள், பச்சை, கறுப்பு, உடன் தேயிலைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளைக் காண்பித்தன. தேயிலைச் செடியின் வெவ்வேறு பாகங்கள் பகுப்புச் செய்யப்பட்டபோது பல்பீனேல்கள் அமினேவமிலங்கள் ஆகியவற்றின் அளவுகள் அரும்பிலிருந்து ஏழாவது இலைவரை படிப்படியாகக் குறைந்திருப்பதாகக் காணப்பட்டது.

புரதம் பற்றிய அளவறிதற்முறையான நிர்ணயிப்புகள் தேயிலைத் தயாரிப்பின் வெவ்வேறு பருவங்களின்போது, முக்கியமாக நொதிப் பின்போது இச் சேர்வைகள் மாற்றமடைவதாகத் தெரிவிக்கின்றன. சென்ற் கூம்ஸ், சென்ற் ஜோக்கிம் ஆகிய இடங்களிலிருந்து பெறப்பட்ட கறுப்புத் தேயிலையிலுள்ள ஆவிப்பிறப்பான சேர்வைகள் பற்றி ஒப்பிட்டுப் பார்த்தபோது லினலூலும் (linalool) அதன் பெறுதிகளும், கெறனியோல், சிஸ்–ஜஸ்மோன் ஆகியன சென்ற் கூம்ஸ் தேயிலையில் கூடுதலான செறிவுகளில் இருப்பதாகக் காணப்பட்டது. அமினோவமிலம், எல்–லியூசின் ஆகியன தேயிலைத் துளிருக்கு (சென்ற் கூம்ஸ்) செயற்கை முறைப்படி சேர்க்கப்படும்போது இவற்றிலிருந்து தயாரிக்கப்படும் கறுப்புத் தேயிலையின் பெறுமதிகள் கூடின. மாங்கனீசும் தேயிலையின் பெறுமதியை கூட்டியது, ஆனல் சிறந்த அளவுக்குமேல் இது சேதம் விளைவிப்பதாக இருந்தது. பொசுபேற்று அனுசேபம் பற்றிய ஆராய்ச்சிகள் கவர்ச்சிகரமான முடிபுகளை தந்துள்ளன.

தேயிலைத் துளிரிலுள்ள சிற்றுயிர்த்தொகைகளிலேற்படும் வேறுபாடுகள் பற்றிய ஆராய்ச்சி, இவை காலத்துக்குக் காலம் மாறுபடுபவை என கடந்த ஆண்டு கண்டுபிடித்த அவதானிப்பை உறுதிப்படுத்தியது. பெரொக்சிடேஸ் எனும் நொதிப்புப் பற்றிய ஒரு ஆராய்ச்சி இந் நொதியங்கள் தேயிலைத் தயாரிப்பின்போது மாற்றமடைகின்றன என்பதைத் தெரிவித்தது.

சென்ற் ஜோக்கிம் தேயிலைத் தரத்தைக் கூட்டும்முகமாக பழமைத் தயாரிப்பு முறைகளில் சில செய்முறை புகுத்தப்பட்டது. இத் துறையில் மேலும் அதிக வேலைகள் நடைபெறுகின்றன. ‘பாய்பொருட் படை’ தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்தி தேயிலை உலர்த்துவதற்கான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது, இத் துறையில் இந் நிலையத்துடன் சேர்ந்து வேலை செய்த ‘அக்சியா பான்ஸ்’ (Axia Fans) வர்த்தக மாற்றமடைந்ததனல் இத் திட்டம் அதிகம் தடைப்பட்டது. உடன் தேயிலை தயாரிப்பது பற்றிய பரிசோதனைகள் இரசாயனவறிஞனுடன் சேர்ந்து நடாத்தப்பட்டன. உறை–உலர்த்தல் மூலம் உற்பத்திசெய்யப்படும் உடன் தேயிலை சிவிறியுலர்த்தல் மூலம் முன்னர் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைகளைவிட அதிகளவில் மேம்பட்டதெனக் காணப்பட்டது.

ஐக்கிய ராஜ்சியத்தை சென்றடையும் தேயிலைகளில் பொலித்தீன் இடப்பட்ட பைகளிலுள்ளவை வழமையான பெட்டிகளிலுள்ளவற்றை விடச் சிறந்தவையல்ல என அறிவிக்கப்பட்டது. இவ்வாண்டின் ஆரம்ப பகுதியில் சென்ற் ஜோக்கிமில் சிரிசி தேயிலைகள் தயாரிக்கப்பட்டன. ஐக்கிய ராஜ்சியத்தில் இத் தேயிலைக்கு அதிக கிராக்கியிருப்பதாகக் காணப்பட்டது. பரிசோதனைமுறை அடிப்படையில் பச்சைத் தேயிலை தயாரிப்பதற்கான திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

வெளிமண்டலம், தொழிற்சாலை, பரிசோதனைச்சாலை ஆகிய இடங்களில் நடைபெறும் பரிசோதனைகளின் வடிவ அமைப்பு, பகுப்பு, புள்ளி விவர விளக்கம் பற்றிய வேலைகளில் புள்ளிவிவரவியலறிஞன் விசேட கவனம் செலுத்தினர். மேற்கொள்ளப்படும் கூடுதலான இவ்வேலை சிக்கலானதொன்ருகவும் அதிகளவானதொன்ருகவும் இருப்பதால் நியம வடிவ அமைப்புகள் சிலவற்றின் தரவுகளை தொகைக்கணிப்புமானி மூலம் ஆராயத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக தொகைக் கணிப்புமானி தற்சமயம் வாடகைக்கு எடுக்கப்படவிருக்கின்றது.

## நூல்நிலையமும் வெளியீடுகளும்

கலாநிதி இ. எம். செனறி அவர்கள் ஜுலை 13ம் திகதி இலங்கையை விட்டுச் சென்றதிலிருந்து இந் நிலைய வெளியீடுகளின் சிரேட்ட பதிப்பாசிரியர் கடமைகளை கலாநிதி எல். எச். பெர்ஞன்டோ ஏற்றுள்ளார். கலாநிதி ஆர். எல். டி சில்வா அவர்கள் துணைப் பதிப்பாசிரியராகத் தொடர்ந்து கடமையாற்றுகிருர். இந் நூல்நிலையத்தின் பரிபாலன வேலையையும் இவ்வருடம் இவர் கவனித்து வந்தார்.

## நூல்நிலையம்

ஒக்டோபர் மாதத்தில் இந் நூல்நிலையம் பரிபாலனப் பிரிவு முன்னர் இருந்த கட்டடத்துக்கு மாற்றப்பட்டது. இந் நூல்நிலையம் இப்போது ஆராய்ச்சி உத்தியோகத்தருக்கு மிக அண்மையாகவுள்ளது.

இந்நிலையத்தின் வெளியீடுகள் இலவசமாக வழங்கப்படும் பட்டியல் இவ்வாண்டு இறுதியில் திருத்தியமைக்கப்பட்டது, ஆனல் இது 1969 இலேயே முற்ருக நடைமுறையிலிருக்கும்.

## வெளியீடுகள்

வருடாந்த அறிக்கையின் 1–ம், 2-ம் பாகங்கள் தொடர்ந்து ஆங்கிலம், சிங்களம் தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் பருவப் பத்திரங்களாக வெளிவருகின்றன. "இலங்கைத் தேயிலையிலுள்ள பூச்சி, சிற்றுண்ணி நோய்களும் அவற்றைக் கட்டுப்படுத்தலும்'' என்னும் தேஆநி தனிக் கட்டுரை, இல 6, நூலை விற்றுப் பெற்ற பணம் அதை அச்சிட ஏற்பட்ட செலவுக்குப் போதுமானதாகவிருந்தது.

மார்ச் மாதத்தில் வெளிவர வேண்டிய 'தேயிலை காலாண்டுச் செய்தி' இதழ் வெளியிடப்படவில்லை. ஆனல் மார்ச்/ஜூன் இதழ்கள் ஒன்ருகச் சேர்த்து ஜூலை மாதத்தில் வெளியிடப்பட்டன. செப்தம்பர் மாத இதழிலிருந்து 'தேயிலைக் காலாண்டுச் செய்தி' வெளியீடுகள் ஒழுங்காக வெளியிடப்பட்டன. இப் பத்திரிகையின் 40 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக இப்போது எல்லாக் கட்டுரைகளின் பொழிப்புகளும் அரசகரும மொழியில் வெளியிடப்படுகின்றன.